கடுமையாக எச்சரிக்கின்றோம்

www.tamilarangam.net

# மக்களை மேய்ந்தோர்கள்

★ மக்களுக்காக மக்களால் நடாத்தப்படும் போராட்டமிது

★ மக்களே எமது பலம்

★ மக்களே எமது உயிர்மூச்சு

★ மக்கள் விடுதலையே எமது லட்சியம்

★ மக்கள் புரட்சி வெடிக்கும்

★ மக்கள் போராட்டம் வெல்லும்

★ மக்களே கிளர்ந்தெழுங்கள்

என்றெல்லாம் வார்த்தைக்கு வார்த்தை மக்கள், மக்கள், மக்கள் என கோஷமிட்டவர்கள். இன்று தம் மக்களையே மேயத்தலைப்பட்டுவிட்டமை விசித்திரமானது, விபரீதமானது வார்த்தை ஜாலங்களாலும் வெற்றுக் கோஷங்களாலும் சாகசச் செயல்களாலும் மக்களை மதி மயக்கியவர்கள். இன்று மக்கள் மீதே கன்னம் வைத்துவிட்டார்கள். கைவைத்து விட்டார்கள். இவ் வேஷதாரிகள் இன்று மக்களை கொள்ளையடிக்கவும் கொலை செய்யவும் துணிந்துவிட்டமை மக்களை மாக்களாக, மந்தை கூட்டமாக நடத்த தலைப்பட்டுவிட்டமை விசானத்துக்குரியதே.

செய்வதையும் செய்துவிட்டு பழியை மற்றைய புனிதமான இயக்கங்கள் மீது துண்டுப் பிரசுரங்கள் மூலம் செலுத்தும் இவர்கள் துணிவுதான் என்னே! திறமைதான் என்னே! இதை துணிச்சல் என்பதா? அபாரத்திறமை என்பதா? இல்லை வடிகட்டிய கயமை என்பதா? விபரீத விளையாட்டு என்பதா? ஒன்று மாத்திரம் தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. தமிழ் மக்களின் புத்தி சாதுரியத்தை, பகுத்தறிவை இப்படியான மறுப்பறிக்கைகள் மூலம் நிந்தனை செய்கிறார்கள், கேலி செய்கிறார்கள், எள்ளி நகையாடுகிறார்கள் தமிழ் மக்கள் அப்படி ஒன்றும் ஏமாளிகள் அல்லர், கோமாளிகளும் அல்லர். வேஷதாரிகளை கயவர்களை புல்லுருவிகளை மக்களால் இனம் காணமுடியும். போராளிகளின் போர்வையில் திரியும் காடையர்களை அவர்களால் அறிந்து கொள்ளமுடியும்

புத்தூர் கொலை, கொள்ளைகளில் சி. ஐ ஏ. (C. I. A)இன் கைவண்ணம் தெரியுதென்பர் காரைநகர் வேலை மொசாட் தான் என்பர். கச்சேரி எஸ். ஏ. எஸ் (S. A. S.)தான் வேறெதுவும் இல்லையென்பர். இவர்களிருக்கும் மட்டும் விடுதலை இயக்கங்கள் மீது எந்த பழியும் வராது. இந்த சி. ஐ ஏ. பூச்சாண்டி எத்தனை நாள் தான் வேலையும் செய்யும். கெட்டிக்காரனின் பொய்யும் புரட்டும் எட்டு நாளுக்குத்தான்.

www.tamilarangam.net

பெரும் ஆயுதங்களையும் ஆள்பலத்தையும் கொண்டு பரவலாக நடாத்தப்படும் இந்த அராஜகச் செயல்கள் தலைமை பீடத்துக்கு தெரியாமல் செயல்படுத்தப்பட முடியுமா? இல்லவே இல்லை தலைமைப் பீடத்தின் கட்டளைப்படியே இந்த அநாகரிக, எதிர் புரட்சிகர நடவடிக்கைகள் ஈழத்தில் அரங்கேற்றப்படுகின்றன. இம் மக்கள் விரோத குற்றங்களில் இருந்து இவற்றை அமுல்படுத்தும் இயக்கங்களோ இல்லை அதன் தலைமைப்பீடங்களோ தப்பமுடியாது.

வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதைபோல் தமிழ் மக்களால் போற்றி, பாதுகாத்து, பேணி, ஊக்குவித்து வளர்க்கப்பட்ட இயக்கங்கள் இன்று தமிழ் மக்கள் மீதே பாய்ந்து விட்டன. எமது போராட்டத்தின் மூலாதாரத்தையே, ஆணி வேரையே ஆட்டம் காண செய்து விட்டன.

நீரிலே மீன் வாழ்வது போல மக்கள் மத்தியில் போராளிகள் வாழவேண்டும் என்றார். சீன செரில்லாத் தலைவர் மாவோ. ஆனால் இங்கு இன்று நீரையே வாரியிறைத்து மடிந்து போகத் தயாராகிவிட்டன மீன்கள். கண்டதிற்கும் கார்ல் மாக்ஸ்ஸை இழுப்பவர்கள் பண்ணும் காரியங்களா இவை. பாவம் கார்ல் மார்க்ஸ் அவர் என்ன செய்வார்.

இப்படியான அராஜகச் செயல்களால் மக்கள் மத்தியில் ஏற்படும் விரக்தி, வெறுப்பு இக் குற்றங்களை இழைக்கும் இயக்கங்களை மாத்திரம் பாதிக்கவில்லை அட்டகாசம், ஆரவாரமின்றி அமைதியாக தொலைநோக்குடன், பாரிய திட்டங்களுடனும், தெளிவான சிந்தனையுடனும் செயல் பட்டுக் கொண்டிருக்கும் புனிதமான இயக்கங்களையும் உண்மையான போராளிகளையும் பாதிப்பதால் இப்படியான அராஜகங்களையும், அட்டகாசங்களையும் மறுப்பறிக்கைத்திருகுதாளங்களையும் நீண்டகாலம் சகித்துக் கொண்டிருக்கமுடியாது.

ஓ... மக்களே... விடுதலை போராட்டத்தை சிதறடிக்கும் எத்தர்களை சிறிலங்காவின் கூலி பட்டாளத்துடன் ஒரே வரிசையில் நிறுத்துங்கள். உண்மையான, அப்பழுகில்லாத போராளிகளை இக்கயவர்களின் நடத்தையால் அநாதரவாக விட்டுவிடாதீர்கள். இக்கயவர்களின் குற்றங்களை விட களப்பலியான போராளிகளின் தியாகம் பெரிதல்லவோ. களைகளுடன் சேர்த்து பயிரையும் களையாதீர்கள். தடியெடுத்தவன் எல்லாம் சண்டியனும் அல்ல. துப்பாக்கி தூக்கியவன் எல்லாம் போராளியும் அல்ல. போலிகளை இனங்கண்டு நிராகரியுங்கள். போராளிகளை இனங்கண்டு ஆதரியுங்கள். போலிகள் என்றும் நிலைத்ததில்லை. உண்மை தியாகம் வீழ்ந்ததில்லை. இது வரலாற்று நியதி.

எமது விடுதலைப் பாதையில் எழும் தடைகள் தகர்க்கப்படும். களைகள் களையப்படும்.

ஓ.... மக்களே.... ஏ.கே தூக்கினாலும், எம்.16 காட்டினாலும் குற்றம் குற்றமே என உரத்து கூறுங்கள்.

ஓ... மக்களே

* இனங்காணுங்கள்
* மொட்டையடியுங்கள்
* மின்கம்பத்தில் கட்டுங்கள்.

"வரலாற்றை படைப்பவர்கள் மக்களே"

## மண்மீட்பு இல்லையேல்
## வீர உயிர் துறப்பு.

21-10-85

தமிழ் ஈழ ராணுவம் (T. E. A.)
தமிழ் ஈழம்